தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 5, சுக்ல, திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, மார்ச் 19, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.''

இனிய சொற்கள் எப்போதும் இன்பத்தையே தரும் என்னும் உண்மையைக் காண்கின்றவன் அவற்றுக்கு மாறான வன்சொற்களை வழங்குவது என்ன பயன் கருதியோ?

1. இரங்கற் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். சிவகுமார் அவர்கள் 30-1-1990 ஆம் நாளன்றும், திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் 16-3-1990 ஆம் நாளன்றும் மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. எம். சிவகுமார் அவர்கள் 1985 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டு வரை நீலகிரி மாவட்டம் கூனூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையிலும், 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையிலும் இரு முறை தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அனைவரும் ஒரு மணித் துளி மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்

* 3697—திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி எத்தனை வழக்குகள் பதிவாகியுள்ளன?

(ஆ) எத்தனை பேர் தண்டிக்கப்பட்டனர்?

(இ) சிறையில் அடைக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1977-ஆம் ஆண்டு முதல் 1988-ஆம் ஆண்டு வரை 13,682 வழக்குகள் பதிவாகியுள்ளன.

(ஆ) தண்டிக்கப்பட்டவர்கள்—566.

(இ) சிறையில் அடைக்கப்பட்டவர்கள்—381.

வேலைவாய்ப்பில் முன்னுரிமை.

*5538ஏ—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மருத்துவத் தகுதியின் அடிப்படையில் ஒய்வுபெறுபவர்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மருத்துவத்தகுதியின் அடிப்படையில் ஒய்வு பெறுபவர்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கும் செயற் குறிப்பு ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை. ஆனால் 50 வயதிற்குள் மருத்துவத் தகுதியின் அடிப்படையில் ஒய்வு பெறும் அரசு அலுவலர்களின் வாரிசுகளுக்கு (ஒருவருக்கு), வேலைவாய்ப்பு அலுவலகத்தை நாடாமலேயே நேரடியாகப் பணி நியமனம் செய்யலாம் என்ற சலுகை ஒன்று நடப்பிலுள்ளது.